செய்தி வெளியீடு எண் : 080 நாள் : 12.01.2023

**<u>தமிழ்நாடு அரசின் சார்பில் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் பொங்கல் விழாவையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள் 14.01.2023 அன்று கோலப்போட்டியை தொடங்கி வைக்கிறார்.</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு அரசின் சார்பாக புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் பொங்கல் விழா நிகழ்ச்சிகள் 14.01.2023, 15.01.2023 ஆகிய தினங்களில் சிறப்பாக நடைபெறவுள்ளது. பொங்கல் விழாவினையொட்டி தமிழ்நாடு இல்லம் முதன்மை உள்ளுறை ஆணையர் திரு.ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., தலைமையில் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள் 14.01.2023 அன்று காலை 11.00 மணியளவில் கோலப்போட்டியினை பொதிகை தமிழ்நாடு இல்லத்தில் தொடங்கி வைக்கிறார்.

அதனை தொடர்ந்து மாலை 6 மணியளவில் போகி பண்டிகை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. பொங்கல் விழாவையொட்டி 15.01.2023 அன்று காலை 11.00 மணிக்கு வைகை தமிழ்நாடு இல்லத்தில் கூட்டாக பெண்கள் பொங்கல் வைத்து கொண்டாடப்பட உள்ளது. அதன் பிறகு பொங்கல் விழா தொடக்க நிகழ்ச்சி மாலை 3.30 மணிக்கு வைகை தமிழ்நாடு இல்லத்தில் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைக்கப்படவுள்ளது. அதனை தொடர்ந்து தமிழ்நாட்டின் பாரம்பரிய பரதநாட்டியம், நாட்டுப்புற கலைஞர்களின் நையாண்டி மேளம், தப்பாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், நாட்டுப்புற பாடல் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

பொங்கல் விழாவையொட்டி பல்வேறு பிரிவின்கீழ் ஓவிய போட்டி, கபடி போட்டி, எரிபந்து, சக்கர நாற்காலி, கோ-கோ மற்றும் உறியடி போட்டி உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பொங்கல் விழாவில் மொத்தம் 199 நபர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

பொங்கல் விழாவையொட்டி சுற்றுலாத்துறை, ஆவின், பூம்புகார், கோ-ஆப்டெக்ஸ், டாம்ப்கால், இன்ட்கோசர்வ், மகளிர் திட்டம் ஆகிய துறைகளின் கண்காட்சி மற்றும் புத்தக கண்காட்சியில் விற்பனையும் நடைபெறவுள்ளது. இக்கண்காட்சியில் தமிழ்நாட்டை சார்ந்த பல்வேறு உணவகங்களும் பொதிகை தமிழ்நாடு இல்லத்தில் செயல்படவுள்ளது.

எனவே பொதுமக்கள் அனைவரும் பொங்கல் விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in